# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள்

# - நிகழ்ச்சி 5

**அறிவிப்பாளர்**: கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக

நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, “ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்”.

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வேதம் சொல்கிறது கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நிற்க வேண்டும். இது நாம் பரலோகத்திற்கு போவாமா மாட்டோமோ என்பதற்கான நியாயத்தீர்ப்போ எப்படி நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பதை சொல்வதில்லை. இல்ல, அதெல்லாம் நாம கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொண்ட நொடியில் முடிந்துவிடுகிறது. இந்த நியாயத்தீர்ப்பில் அவர் நம்மை இரட்சித்த நாள் முதல் நாம எப்படி வாழ்ந்தோம் என்பதை கிறிஸ்து நிதானித்து பார்க்கிற நேரமாக இருக்கும். அவரை உண்மையாய் நாம் பின்பற்றி நடந்தால், நித்திய நித்தியமான பலனை நமக்கு தருவதாக அவர் வாக்குரைத்திருக்கிறார். ஒரு கிறிஸ்துவராக அவருக்காக நீங்கள் வாழாதிருந்தால், அவர் பார்க்கிற விதமாக உங்கள் வாழ்க்கையை பார்க்கவும் புரிந்துகொள்ளவும் இல்லை என்றால் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பலனை நீங்கள் இழந்திடுவீர்கள். இன்றைக்கு இந்த தலைப்பை ஆராய்வதன்மூலம், ஒரு சில கேள்விகளுக்கான விடையை உங்களுக்கு சொல்ல இருக்கிறோம்: என்னுடைய வாழ்நாள் முழுவதும் நான் கிறிஸ்தவனாக வாழாமல் இறுதியில் கடைசிகாலத்தில் இயேசுவை நான் ஏற்றுகொண்டால் என்னுடைய வாழ்க்கை எப்படி இருக்கும்? ஒருவேளை நீங்க இந்த சூழ்நிலையில் இருப்பவராக இருக்கலாம் கிறிஸ்துவுக்காக வெறும் சில மாதங்களோ வருடங்களோ உங்களுக்கு இருக்கலாம், அப்படி

இருந்தாலும் கிறிஸ்துவிடமிருந்து நீங்கள் பலனை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்குமா? இன்றைக்கு எனது விருந்தினரான Dr. எர்வின் லட்சர், சிக்காகோவின் மூடி திருச்சபையின் மூத்த போதகர், இல்லினோசிஸ். இவர் இந்த கேள்விகளுக்கு அளித்திடும் பதிலை கவனியுங்கள்:

**டாக்டர். எர்வின் லட்சர்:** சரி, அதாவது, ஜான், என்னை வியக்க வைக்கும் ஒரு உவமை இருக்குது. சின்ன பிள்ளையா அதை வாசித்தது ஞாபகம் இருக்குது அப்ப நா, இதுல எந்த அர்த்தமும் இல்லையே என்று சொல்லியிருக்கேன்." மத்தேயு பத்தொன்பதாம் அதிகாரத்துல இருக்கு அது பலனை பற்றிதான் சொல்லுது. அந்த பகுதியில், உங்களுக்கு ஞாபகமிருக்குதா, பேதுரு இயேசுவிடம் கேட்ப்பான், "நாங்க எல்லாத்தையும் விட்டுட்டு வந்திருக்கோம் எங்களுக்கு என்ன கிடைக்கும்? அதற்கு இயேசு சொல்வாரு, "என் நாமத்தினிமித்தம் சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துகொள்வான் என்றார்."

இது தேவன் உதாரதுவமுள்ளவர் என்பதை நமக்கு நினைப்பூட்டு கிறது. நாம நினைத்து பார்ப்பதற்கு மேலாக அவர் நமக்கு பலனை கொடுத்திடுவார், நமது தகுதிக்கு மிஞ்சியதாக இருக்கும். இருந்தாலும்

அவர் நம்மை நேசிப்பதாலும் நாம் அவருடைய பிள்ளைகளாக இருபதாலும் அவர் அப்படி செய்திடுவார்.

அங்க இயேசு அவங்களுக்கு ஒரு உவமையை சொல்கிறார், அதன் அர்த்தம் இதுதான். அதாவது அவர், "பரலோக ராஜ்யம் தன் திராட்சை தோட்டத்தில் வேலைக்கு ஆட்களை அமர்த்த காலையிலே புறப்பட்டு போகும் வீட்டு எஜமானுக்கு ஒப்பாக இருக்கிறது என்றார்"

சரி, இதுல இருக்கிற உண்மைய பாருங்க இங்க எதையாவது செய்யணுன்னு ஜனங்க காத்துட்டு இருக்காங்க. அவன் காலையில ஆறுமணிக்கு வெளியில போயிட்டு கூலிக்கு ஆட்களை ஏற்படுத்தி, "அவங்க அந்த கூலிக்கி சரின்னு சொன்னதும்" - ஒரு நாள் கூலிக்கு ஒத்துகிடதும் - அவங்களை அவன் திராட்சை தோட்டத்துக்கு அனுப்பறான்." இப்ப, அதே மனுஷன் தான் காலையில ஒன்பது மணிக்கு மறுபடியும் போறான், மறுபடியும் மத்தியானமும் போறான், அப்பறம் மதியம் மூணுமணிக்கு போறான், அதோட மறுபடியும் சாயங்காலமும் போறான். எல்லாம் ஆறு மணியோட முடிச்சிடுது. இப்ப ஜனங்க நினைக்கிறாங்க, "சரி, எது சரியோ அந்த பணத்தை கொடுங்க என்று சொல்லீட்டு தான திராட்சை தோட்டத்துக்கு வந்து நாம வேலை செய்தோம்.

எதுக்காக இந்த உவமையை எடுத்தொன்னா கூலிக்கான நேரம் வருகிறது. ஆறு மணிக்கு மேல அந்த எஜமான் சொல்றாரு, "பிந்தி வந்தவர்களை முதல்ல கூப்பிடுங்க அவங்களுக்கு நா முதல்ல கூலி

கொடுக்கிறேன். அவங்க வரிசையில நிற்கிறாங்க மேலும் வேதம் சொல்கிறது அவங்க அந்த பணத்தை வாங்கிகிட்டாங்க - ஒரு நாள் கூலி - ஒருமணிநேர வேலைக்கு.

இப்ப கற்பனை செய்து பாருங்க ஒரு மனுஷன் தன்னோட மனைவிகிட்ட போய் சொல்றான், “மாயா மாயா! அந்த எஜமான் எவ்வளவு உதாரகுணமுல்லவர் என்று உன்னால யோசிக்க முடியாது! நாங்க ஒருமணிநேரம் வேலை செய்து ஒரு நாள் கூலி வாங்கினோம். இன்னைக்கு ராத்திரி நமக்கு விருந்துதான் என்றிருப்பானா!? அதை நம்மால பார்க்க முடியுது, இல்லையா?

இப்ப, அங்க முதல்ல வந்தவங்க, கூலி பெறுகிற நேரம் வந்தபோது, அவங்க ரொம்ப உற்சாகமா இருந்தாங்க ஏன்னா அவங்க நினைச்சாங்க, “ஒரு மணிநேரம் வேலை செய்த அவனுக்கு ஒருநாள் கூலி கிடைச்சா, நமக்கு எவ்வளவு கிடைக்கும்? பன்னண்டு பணம் கிடைக்குமா? சரி, முதல்ல வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் வந்தபோது, அதிகமாக கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள், ஆனா அவங்களுக்கும் ஒரு பணம் தான் கொடுக்கப்பட்டது. அதை அவர்கள் பெற்றுகொண்டபோது, சபையில பொதுவா தொழில் செய்பவர்களுக்கான கூட்டம் முடிந்த பிறகு நடக்கிற காரியத்தை தான் அவர்களும் செய்தாங்க. வேதம் சொல்கிறது அவர்கள் எஜமானை பார்த்து முறுமுறு த்தார்களாம். அவங்க கேட்டாங்க, “பிந்தி வந்தவர்கள் ஒரு மணிநேரம் மட்டுமே வேலை செய்தார்கள்  பகலின் உஷ்ணத்தில் பொருட்படுத்தாமல்

வேலை செய்த எங்களை அவர்களுக்கு இணையாக் கண்டீரோ என்றனர்."

அதற்கு அவர் அவர்களுக்கு பிரதியுத்திரமாக, "சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்திவந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்சரி, ஜான், இப்ப கேள்வி என்னன்னா, இந்த உவமையோட நமக்கு என்ன வேலை? இதை எப்படி வியாக்கியானம் செய்கிறோம்? இது நாம சொன்ன காரியங்களை நேரடியாக பேசுகிறது என நினைக்கிறேன். அதாவது, ராஜ்யத்தில் பிந்தி வருகிறவர்களின் நிலையை குறித்து சொல்கிறது. மருத்துவமையில் ஒரு மனிதனை கிறிஸ்துவின் இரட்சிப்பை பெறும்படி நடத்திகொண்டிருந்தது என் நினைவிற்கு வருகிறது. மூன்று வாரத்திற்கு பிறகு மரித்துவிட்டார். அவருக்கு பலன் பெற ஏதாவது வாய்ப்பு இருக்குமா? உண்மைய சொன்னா, நிறைய பேர் இந்த உவமையை வைத்து எல்லாருடைய பலனும் ஒன்று போல இருக்கும் என்பதாக சொல்லி கொடுக்கிறார்கள். அதற்கு வாய்ப்பு இல்ல என்று தான் நினைக்கிறேன் ஏன்னா இதுக்கு முன்னால இயேசு

சொல்லும்போது என்ன சொல்றார், அதே பகுதிகளில் தான் சொல்கிறார், “தன் தகப்பனையாவது தாயையாவது வீட்டையாவது நிலத்தையாவது விட்டனுக்கு நூறத்தனையான பலன் வரும் என்று சொல்லியிருக்கிறார்.” அதனால இந்த அர்த்தம் இந்த உவமைக்கு பொருந்தாது.

மேலும் இங்க இந்த பணம் இரட்சிப்பை குறிக்கல. இந்த உவமையோட முக்கிய செய்தி நாம எந்த மனப்பான்மையோட ஊழியம் அல்லது வேலைய செய்கிறோம் என்பதை சார்ந்திருக்கிருக்கிறது. நீங்க கவனிச்சு பாருங்களே சீக்கிரம் வந்தவங்க, வசனம் 2ல சொல்லியிருக்கு, “வேலையாட்களோடு நாள் ஒன்றுக்கு கூலி பேசி அவர்களை தனது திராட்சை தோட்டத்திற்கு அவன் அனுப்பி வைத்தான்.” இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? இங்க பேரம் பேசி தீர்மானித்து செயல்படும் விதம் காணப்பட்டது. அவங்க என்ன சொல்வாங்கன்னா, “இன்னைக்கு எங்களுக்கு இவ்வளவு குடுப்பாங்க என்ற கூலியின் நிச்சயம் இல்லைன்னா அவங்க திராட்சை தோட்டத்துல கால் வைக்க மாட்டாங்க.” சுவாரஸ்யமானது , இதுதான், அவங்க என்ன நினைகிறாகன்னா, நீங்க உங்ககிட்ட வேலை செய்யும் சந்தப்பம் தந்ததற்கு நன்றி நீங்க சொன்னதை செய்வீங்கன்னு நம்பறோம் என்று சொல்கிறார்கள்.” அதனால அவங்க உதாரத்துவமாக பலனை அடைகிறார்கள்.

இப்ப, இத யோசித்து பாருங்க - ஒரு சில யோசனைகள். முதலாவதாக, நாம எந்தவித ஒப்பந்தமும் இல்லாம விசுவாசத்தோடு தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும். என்ன சொல்றேன்னா, தேவனிடத்தில் எந்த பேரமும் பேச கூடாது. நாம அவர்கிட்ட வந்து, "சரி, ஆண்டவரே, உங்களுக்கு ஒன்னு சொல்லட்டுமா. நீங்க என்னோட தொழிலை ஆசீர்வதித்தாள், நா பத்து மிஷனரிகளை தாங்குகிறேன்." இந்த மாதிரியான எண்ணம் வேண்டாம். அந்த அருட்பணியாளர்களை உதாரத்துவத்தோடு சந்தோஷத்தோடு தாங்கிடலாம் தேவன் தமக்கு பிரியமானபடி நம்மை ஆசீர்வதிப்பார். ஏன்னா அப்பத்தா அவருடைய தயாளத்தை பார்க்க முடியும்.

போதனைகளை கற்று தரும் ஆசிரியர் இருந்தார் - பிரசங்கிப்பதை பற்றி கற்று தருவாங்க - அவர் சொன்னார் ஒரு நாள் அவங்க மகன் போய் புல் தரையை நல்லா சுத்தம் செய்திட்டு அவர்கிட்ட வந்து கேட்டானா, "அப்பா, நா லான சுத்தம் செய்துட்டேன்" - அதாவது இதுக்கு, என்ன அர்த்தம் என்றால், "எனக்கு ஏதாவது குடுங்க." அவர் அவங்க பையன் கிட்ட சொன்னாராம், " அதுக்கு எவ்வளவு கிடைக்குன்னு நீ எதிர்பார்க்கிற?" அந்த பையனால அதுக்கு பதில் சொல்லவே முடியல. அப்பா அழுத்தமா கேட்டாரா: "அதற்கு எவ்வளவு கிடைக்குன்னு நீ எதிர்பார்க்கிறாய் என்றார். கடைசில, அவர் சொன்னாரா, "அதுக்கு நீயே ஒரு கூலிய நிர்ணயிக்கலாமே? அதற்கு அந்த பையன் சொன்னா, "அப்பா, நீங்களே அத முடிவு செய்யுங்க

ஏன்னா நீங்க உதாரதுவமுல்லவர், நான் கேட்பதற்கு மேலாக நீங்க எனக்கு செய்வீங்க எனக்கு தெரியும் என்றானாம்.” சரி, தேவனும் இப்படிதான் இருக்கிறார். அவர் தீர்மானிக்கும்படி விட்டுவிடுங்க, அவர் தாராளமாக உங்களுக்கு கொடுத்திடுவார்.

இரண்டாவது பாடம் என்னன்னா, அதாவது, ஒப்பந்தமில்லாத விசுவாசம் என்ற நிலையோடு கூட, அர்ப்பணிப்புடன் வேலை செய்கிறவராக இருக்கணும், கபட்டு எண்ணம் இருக்க கூடாது. நா வாசித்த பகுதியை நீங்க கவனிச்சு பார்த்தீங்களா? அதுல, “என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரம் இல்லையோ என்று கேட்கப்பட்டு இருக்கிறது. நான் தயாலனாக இருக்கிறபடியினால் நீ வன்கண்ணன் ஆக இருக்கலாமா? அதாவது, DR. ரைரீ இவர்தான் ரைரீ ஸ்டடி பைபிளை எழுதியவர் சொல்கிறார் ஒரு நாள் அவர் அமெரிக்க ஏர்லைன்ஸ் ல இருந்தப்ப அதுல அவங்க இரண்டாம் நிலை பயணிகள் சிலரை பிசினஸ் கிளாஸ்க்கும், சிலரை முதல் நிலைக்கும் மாத்தினாங்க, ஆனா அவர் அந்த பட்டியல்ல இல்ல. அதனால சோர்வாக இருந்தார். அப்பதா இந்த உவமை அவருக்கு நினைவிற்கு வர அவரையே கேட்டுகொண்டார், “அமெரிக்க ஏர்லைன்ஸ் தயாள குணத்தோடு இருப்பதனால் நீ வன்கண்ணன் ஆகலாமா? அமெரிக்க ஏர்லைன்ஸ் தங்களுக்கு இஷ்டமானதை செய்ய அவர்களுக்கு அதிகாரம் இல்லையோ? கோச் சீட் கிடைத்த சிலரை அவங்க முதல் நிலையில் உட்கார வைக்க விரும்பினால் அதுல

என்ன தப்பு இருக்குது? அமெரிக்க ஏர்லைன்ஸ் தயாள குணமோடு இருப்பதால் நீ வன்கண்ணன் போல இருக்கலாமா?

இந்த, மாதிரிதான், தேவனுடைய அணுகுமுறையும் இருக்கும். எப்பவாவது தேவன் சிலரை அதிகமாக ஆசீர்வதித்திருப்பதை நீங்கள் கவனித்து இருக்கிறீர்களா அதிகமான ஆசீர்வாதம் அவங்களுக்கு இதெல்லாம் கிடைக்குன்னு நம்ம நினைத்து பார்க்க முடியாத ஆசீர்வாதங்களை பெறுவதை பார்த்திருக்கிறீர்களா? இதை சொல்லும்போது புன்னகையோடு சொல்வேன் ஏன்னா, உண்மையில், தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களை பெற ஒருவரும் பாத்திரவான்களாக இருப்பதில்லை. அந்த நாளின் முடிவில் நாம எல்லாருமே லாபத்தை கொடுக்காத ஊழியர்களை போலதான் இருக்கிறோம். ஆனா அர்ப்பணிப்போடு நாம் சேவை செய்திடவேண்டும், விசேஷித்த சலுகைகளை பெற்றுகொண்டவர்களை பார்த்து பொறாமை இல்லாம, ஏன், அவர் இப்படி செய்கிறார் என்று கேட்க்காம பிரியமாக நடந்துக்கணும்.

**ஆன்கர்பெர்க்:** சரி எர்வின் சொன்னதை நீங்க கவனித்திருப்பீர்கள். இப்ப உங்கள ஒன்னு கேட்க்கிறேன், எந்தவித ஒப்பந்தமும் இல்லாம தேவனை சேவிக்கிறீர்களா? அல்லது இன்றைக்கு தேவனோடு நீங்கள் பேரம் பேசிக்கொண்டு இருக்கீங்களா? மேலும், தேவன் மற்ற கிறிஸ்தவர்களுக்கு எப்படி பட்ட ஆசீர்வாதங்களை அள்ளி கொடுத்தாலும் பரவாயில்லை என்று எந்த வித பொறாமையும்

இல்லாம அர்ப்பணிப்போடு ஊழியம் செய்றீங்களா? இந்த மாதிரி வாழும்போது தேவன் அதில ரொம்ப ரொம்ப பிரியமா இருக்கார். ஆனா இப்ப நாம ஒரு கேள்விய பார்க்கவேண்டும். இப்ப மருத்துவ மனையில் இருக்கிற ஒரு மனிதர் தான் மரிப்பதற்கு ஒரு சில வாரத்திற்கு முன்பு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போது அவருக்கு என்னவாகும். நம்பிக்கை வச்சிட்டார். சரி ஒரு வாலிபர் அவரோட வாழ்க்கை சீக்கிரமா முடிச்சிடுது அவருக்கு வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவுக்காக வாலும் சந்தர்ப்பம் கிடைக்கல இவங்க நிலை என்ன? இந்த வாலிபரும் தேவனிடத்தில் இருந்து பலன்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறதா? அல்லது கொஞ்ச நாட்கள் மட்டும் வந்ததால ஏதாவது செய்யவேண்டியிருக்குமா? நீங்க அடுத்து கேட்க்க போகிற காரியம் ரொம்ப முக்கியமானது கவனமா கேளுங்க.

**எர்வின் லட்சர்:** கவனிங்க எல்லா பலன்களையும் கிருபையினால் தான் பெற்றுகொள்கிறோம். அது சட்டம் பிரமாணம் என்பதை சார்ந்ததல்ல. தாமதமாக வந்தவர்கள், அவர்களும் தேவனுடைய கிருபையின் அடையாளம் இவர்கள் அந்த உவமையில் ஒருமணிநேரம் வேலை செய்தவர்களுக்கு ஒப்பானவர்கள். இதுல அடித்தளமான விஷயம் என்னன்னு உங்களுக்கு தெரியுமா? நம்முடைய தகுதிக்கு மீறி தேவன் நமக்கு கொடுப்பவராக இருக்கிறார். மருத்துவமனையில் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொண்ட நபருடைய நிலை எப்படி இருக்கும்? அவன்

கிறிஸ்துவுக்காக நற்கிரியைகளை செய்தானா - இந்த கட்டத்தில் என்ன நினைக்கிறேன்னு சொன்னா அந்த மனுஷன் நிச்சயம் தனக்கு நடந்த அனுபவத்தை பார்க்க வருகிற எல்லார்கிட்டயும் சொல்லியிருப்பார் - அவர் நினைப்பதற்கும் மேலான ஒரு பலனை உதாரத்துவமாக அவன் நிச்சயம் பெற்றுகொள்வான்.

அப்ப கிறிஸ்துவை நேசித்த சீக்கிரமாக மரித்துபோகும் வாலிபனின் நிலை என்ன? என்னுடைய உறவினர், வயசு 15, தன்னோட காரின் பின் புறத்தில் உட்கார்ந்து வசனத்தை மனப்பாடம் செய்து கொண்டு போயிட்டு இருந்தப்ப கார் விபத்தில் கொல்லப்பட்டான்/. அவன் நிலை என்ன? நிறைய பலன்களை சேகரிக்க அவனுக்கு சந்தர்ப்பம் கிடைக்கல. அவனுடைய கூலியை யோசித்து பார்க்கலாமா. ஆனா தேவன் அந்த மாதிரி நினைப்பவர் இல்லை. தேவன் தனக்கு கொடுத்த அந்த நாட்களில் அவன் எவ்வளவு உண்மையுள்ளவனாக இருந்தான் என்பதை அவர் பார்க்கிறார். அதனால, என்னை பொறுத்தவரை இதுதான் ரொம்ப முக்கியம். எப்போதும் நினைவிருக்கட்டும், தேவன் தயாள குணம் கொண்டவர் தம்மை நேசிக்கிறவர்களுக்கு கொடுப்பதில் பிரியமாயிருப்பார், அதுதான் ரொம்ப ரொம்ப முக்கியமானது.

ஜான், தான் அதிகமாக நேசித்த மனைவி மற்றும் மகனுடன் இருந்த ஒருவருடைய கதையை சொல் விரும்புகிறேன். மனைவி, அந்த பையனுடைய தாய், இறந்துட்டாங்க. இப்ப அந்த பையனோட தனியா இருந்தாரு அவனை வளர்க்க அவருக்கு உதவி வேண்டும் என்பதை

உணர்ந்துகொண்டார். அப்ப ஒரு வேலைகாரமா வந்து அவரிடம், நா குழந்தைய வளர்க்க உதவரேன்னு சொன்னாங்க, அதை அப்படியே செய்தாங்க. தன்னுடைய மகனை நேசிப்பது போல இந்த பையனையும் நேசித்தாங்க. இப்ப, அந்த மனுஷன் இறந்துட்டாரு, அண்ட் மகனும் மரித்துவிட்டான், இந்த ஏலம் விடும்போது அவளும் போறா அந்த ஐசுவரியமான மனிதர் பயன்படுத்திய அழகிய பொருட்களை வாங்கும்படியாக அவ போகல. அந்த பையனோட புகை படத்தை அவள் வாங்கும்படி போகிறாள், சுவாரஸ்யம் என்னன்னா அதை யாரும் வாங்க மாட்டாங்கன்னு தெரியும். அங்க அதிக விலையை வைத்து மற்ற பொருட்களை எல்லாம் அவங்க ஏலத்தில் விற்றார்கள். அவ அந்த படத்தை சில சென்டுகள் கொடுத்து வாங்கினால். யாரும் அதை சட்ட பண்ணல. அதை அவ வீட்டுக்கு எடுத்துட்டு போன பிகரு அதை கழற்றி பார்த்தபோது , அதிலிருந்து ஒரு துண்டு காகிதம் கீழ விழுந்தத அவ கவனிச்சா. அந்த உயிலில் ஒன்று இருந்தது, " என் மகனை நேசித்து இத படத்தை வாங்குகிற நபருக்கு என்னுடைய எல்லா சொத்துக்களையும் நான் கொடுக்கிறேன் என்று எழுதி இருந்தது."

இன்றைக்கு உங்களுக்கு சொல்லுகிறேன், தேவன் தமது குமாரனை நேசிக்கிறார். அவருடைய குமாரனை நாமும் நேசித்தால், எதையும் நமக்கு விளக்கி வைக்க மாட்டார்! "தம்முடைய ஒரே குமாரன் என்றும் பாராமல் நம் எல்லாருக்காகவும் அவரையே கொடுத்தவர் மற்ற

எல்லாவற்றியும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?” இயேசுவுக்காக நாம செய்கிற எல்லா காரியங்களும் நிச்சயமாக கணக்கு வைக்கப்படும் என்பதை நாம மறந்திரவே கூடாது.

**ஆன்கர்பெர்க்:** இந்த நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருக்கிற உங்களில் சிலர் உங்களுக்கு தீராத நோய் இருப்பதாக உங்கள் மருத்துவர்கள் சொல்ல கேட்டிருக்கலாம். சில இன்னும் கொஞ்ச நாள் தான் உயிரோட இருப்பீங்க என்று சொல்லவதை கேட்டிருக்கலாம். சிலருக்கு தேதி இன்னும் சொல்லாம இருக்கலாம், ஆனா உங்க முடிவு நெருங்கீட்டு இருக்குன்னு சொல்லப்பட்டு இருக்கலாம். இன்றைக்கு நாங்க உங்களை எப்படி ஊக்குவிக்க முடியும்? கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்திட உங்களுக்கு இன்னும் சந்தர்ப்பங்கள் இருக்கிறதா, உங்களுடைய நீண்ட குறுகிற வாழ்நாளில் சந்தர்ப்பம் இருக்கா? அதற்கான பதில், ஆமா” ஆமா என்ற பதிலுக்கான காரணம் என்னன்னா தேவன் கிருபையுள்ளவராக இருக்கிறார் அன்புள்ளவர் அவருக்காக குறுகிய காலத்தில் நாம் செய்கிற அனைத்திற்கும் நமக்கு பலனளிப்பவராக இருக்கிறார். அடுத்து Dr. லட்சர் என்ன சொல்கிறார் என்பதை கவனமாக கேளுங்க:

**எர்வின் லட்சர்:** ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள் இன்றைக்கு இதை கேட்டு கொண்டு இருப்பவர்கள், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க ஆயத்தப்பட உங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கிறது, உங்க வாழ்க்கை குறுகியதாக நீண்டதா இருகான்றது

விஷயமல்ல. ரொம்ப வியாதிபட்டிருகும் ஒருத்தரோட நா பேசிக்கொண்டு இருக்கலாம். இரண்டு காரியங்கள்: முதலாவதாக, உங்களுடைய பாவங்களை நீங்கள் அறிக்கை செய்வதும் மற்றவர்களோடு ஒப்புரவாகுதலும் போன்ற காரியங்களை எல்லாம் முதல்ல செய்து முடிக்க வேண்டியது முக்கியம்தான். பவுல் சொன்ன வார்த்தைகளை உங்களுக்கு நான் நினைப்பூட்ட விரும்புகிறேன், "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்."

இரண்டாவதாக, மீதமுள்ள நாட்களை கிறிஸ்துவுக்காக வாழ்ந்திடுங்கள் அப்ப உங்களுக்கே தெரியும் இந்த உவமையின் மக்களை போல தேவனுடைய தயாள குணத்தை புரிந்துகொள்வீர்கள். நீங்க நினைத்து பார்ப்பதற்கு மேலான காரியங்களை உங்களுக்கு கொடுத்திடுவார். அவரை சேவிக்க முடியாத சூழ்நிலையில் நீங்கள் இருந்தால் கூட அதாவது, நீங்க, இப்போ மருத்துவமனையில் படுத்து கொண்டு இருக்கலாம், இல்ல நீங்க ஊனமுடையவராக இருக்கலாம். நாம நினைக்கிற மாதிரியான வேலைகளை உங்களால செய்ய முடியாம இருக்கலாம். நீங்க அவரை நேசிக்க முடியுமே, அது முடியுந்தான? ஏன்னா அவர் உங்கள் இருதயத்தை பார்க்கிறார் உங்கள் சிந்தனைகளை பார்க்கிறார் அதனால அதிலிருந்து நீங்க அவரை ஆராதிக்க துவங்கிடலாம் உங்களுடைய திறமைகள் மூலம் நீங்க அவருக்கு ஊழியம் செய்திட முடியும். வேதம் சொல்கிறது, உங்கள் பலனை நீங்கள் அடையாமல் போவது இல்லை."

*****

**ஆன்கர்பெர்க்:** சரி, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம எப்படி இருப்போம் என்று வேதம் சொல்கிற காரியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, சிலர் சிலர் கேள்விகளை கேட்ப்பார்கள், "மனந்திரும்புதலுக்கு முன்னாடி நான் செய்த நற்கிரியைகள் என்னவாகும், இரட்சிக்கபடுவதற்கு முன்பு செய்தவைகளின் பலன் என்ன? அதுக்கு எனக்கு ஏதாவது பலன் கிடைக்குமா? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** அதாவது, நா பொதுவா ஒரு விஷயத்தை சொல்லுவேன் நீங்க கிறிஸ்தவராக இல்லாவிட்டாலும் கேட்ட மனிதனா இருப்பதை விட நல்ல மனுஷனா இருப்பது நல்லது. நிச்சயமா, குற்றவாளிகளோடு பக்கத்து வீட்டில் குடியிருப்பதை விட நல்ல கனிவான அக்கறை காட்டும் மக்கள் நடுவில் குடியிருப்பது சிறந்த விஷயமாக தான இருக்கும். ஆனா இந்த காரியத்தையும் நீங்க தெரிஞ்சுக்கணும் - தேவனுக்கு முன்பாக நிர்ப்பது மற்றும் பரலோகத்தில் பிரவேசிப்பது என்று வரும்போது, நல்ல மனுஷனுக்கும் குற்றவாளிக்கும் ஒரே மாதிரியான அனுபவம் தான் இருக்கும். ஏன்? ஏன்னா அவங்கள்ள இரண்டுபேருமே நல்லவங்களா இருக்க முடியாது. நீங்க தேவனை போல நல்லவராக இருக்கணும்  கிறிஸ்து மட்டும்தான் உங்களை அப்படி மாற்ற முடியும் அவருடைய நீதியை பெற்றிருக்கிறீர்கள். அதனால ஒரு விஷயத்தை தெளிவு படுத்திக்கலாம் அவரை நீங்க சொந்த இரட்சகரா ஏற்றிருந்தா, நீங்க அவரை மாதிரியே

இருப்பீங்க. சார்லோட் எலியாட் எழுதியது போல, “எந்த கோரிக்கையும் இல்லாமல் நானாகவே வருவேன். உம்முடைய இரத்தம் எனக்காக சிந்தப்பட்டது அதினால் என்னை சுத்திகரித்திடும், உம்மிடம் வருகிறேன். ஓ, தேவ ஆட்டுக்குட்டியே, உம்மிடம் வருகிறேன்.” நம்முடைய தேவைகளை தவிர வேறு எதையும் அவரிடம் நாம் கொண்டு வருவது இல்லை. தேவன் தம்முடைய கிருபையை நமக்கு அருளியிருக்கிறார். நீங்க கிறிஸ்துவிடம் வந்த பிறகு, அதற்கு பிறகு தான் அவர் நம்மை மகனாக மகளாக ஏற்றுக்கொண்டு நடத்துகிறார்; நம்மை கண்டித்து நடத்துகிறார், வரப்போகிற ராஜ்யத்தில் நாம நல்ல ஸ்தானத்தை பெற்றும்படிக்கு பலனை உணர்ந்து சிறப்பாக செயல்ப்படும்படியாக அவர் விரும்புகிறார்.

**ஆன்கர்பெர்க்:** எப்படி கிறிஸ்தவராகிய நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக சிறப்பாக நிற்க முடியும் என்பதை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். கிரிச்துவிக்காக உண்மையாக ஜீவிக்கிற ஒவ்வொரு கிறிஸ்தவருக்கு கொடுக்கப்படும் பலன்களில் ஒன்று கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆளுகை செய்யும் உரிமையை பெறுவது. இதெல்லா என்னத்தை குறிக்கிறது? வேதாகமத்தில் இவை எங்கு போதிக்கப்பட்டு இருக்கிறது? Dr. லட்சர் விளக்கமளிக்கிறார்:

**எர்வின் லட்சர்:** சரி, ஜான், கிறிஸ்து நம்மையும் அவரோடு கூட ஆளுகை செய்யும்படியாக அனுமதிக்கிறார் என்பது நம்முடைய கற்பனைக்கு மிஞ்சிய ஒன்று. ஆனா வெளிப்படுத்தல் புஸ்தகத்தில்

அவர் சொல்லியிருக்கிறார், “ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ, அவன் எப்படி நான் ஜெயம் பெற்று என் பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறேனோ அதேபோல அவனும் என்னுடனே என்னுடைய சிங்காசனத்தில் வீற்றிருப்பான் என்றார்.” நாம தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருப்போம். அதுக்கு நாம தகுதியானவங்களா? நிச்சயமாக இல்லை. நாம தெய்வீக மானவங்களா? இல்ல. இதுக்கெல்லாம் என்ன அர்த்தம் என்றால் தேவன் நம்மீது கிருபையாக இருக்க விரும்புகிறார் நம்மை தேவ தூதர்களுக்கு மேலாக நிறுத்திட விரும்புகிறார். அதுமட்டுமல்ல, சாத்தான் நம்மிடம் கோபப்படறதுல எந்த வித தவறும் இல்லையே. அவன் வீழ்ச்சி அடைவதற்கு முன்பு இருந்த நிலையை விட கொஞ்சம் மேலான நிலையை நாம பெற்றிடுவோம். ஏன்னா தூதர்கள் ஒருபோதும் கிறிஸ்துவின் சகோதரர்களாக மாற முடியாதே. எந்த தூதனும் தேவனுடைய சுதந்தரனும் இயேசு கிறிஸ்துவோடு உடன் சுதந்தரருமாக முடியாது.” சரி, நாம பலன்களை குறித்து பேசிக்கொண்டு இருக்கிறோம், இந்த பலன்கள் என்னது? முதலாவதாக, விசேஷித்த சிலாக்கியங்கள்.

எல்லா வேத பகுதிகளையும் பார்க்க நமக்கு நேரமில்லை, ஆனா இந்த விசேஷித்த கனத்தை குறித்து சொல்லுகிற வெளிப்படுத்தல் விசேஷத்தின் முதல் சில அதிகாரங்களை நீங்கள் வாசிக்கும்படியாக உங்களை உற்சாகப்படுத்துகிறேன். “ஜெயங்க்கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு தேவனுடைய பரதீசியில் இருக்கிற ஜீவ விருட்சத்தின்

கனியை கொடுப்பேன்." ஜெயங்க்கொள்ளுகிறவன் அநேக ஜாதிகளை ஆளும்படியான அதிகாரம் பெறுவான்." இப்படியே போயிட்டே இருக்கும். சரி, சிலர் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஜெயம் கொண்டவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனா அது அப்படி கிடையாது. இந்த பகுதிகள் எப்போதும் தனிநபரை குறித்துதான் சொல்லுகிறது: ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ" இன்றைக்கு, ஜெயம் கொள்ளுகிற நபர்களோடு தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். ஜெயம் கொள்ளுகிறவர்களாக இல்லாத கிறிஸ்தவர்களோடு கூடவும் நான் பேசிகொண்டிருக்கலாம்.

சரி, ஜெயம் கொள்ளுகிறவன் என்றால் என்ன? ஜெயம் கொள்ளுகிறவன் என்பவர் வாழ்வின் சூழ்நிலைகளில் கிறிஸ்துவை போல பிரதியுத்திரம் கொடுப்பவராக இருக்கிறார். இந்த உலகத்தின் சோதனைகள் தங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் வாழ்கிறவர்கள். பணத்தால் விலைக்கு வாங்க முடியாத ஒருவராக இருக்கவேண்டும். ஒருத்தர் தானாக முன்வந்து, "கர்த்தராகிய இயேசுவே, என்னால முடிந்ததை சிறந்ததை நான் செய்கிறேன் - இதுல நாம யாரும் பூரணமானவர்கள் கிடையாது ஆனா - என்னால முடிந்த அளவிற்கு நான் உமக்காக வாழ முயல்கிறேன் என்ன நடந்தாலும் உம்மை நேசிபேன் என்று சொல்லணும்." அதுதான் ஜெயம் கொள்ளுகிறவன்.

**ஆன்கர்பெர்க்:** அவருக்காக நாம செய்கிற எல்லாவற்றிற்கும் தேவன் நமக்கு பலன் அளிக்கிறார் என்பது அருமையான வாக்குதத்தமாக இருக்கிறதில்லையா? ஆனா சிலர் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு ஊழியத்துக்காக கிரீடங்கள் கொடுக்கப்படும் அதை கிறிஸ்துவின் பாதத்தில் நாம் இறக்கி வைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு பிறகு பத்து நிமிடத்தில், எப்படி இருந்த்திருந்தாலும் சரி நித்திய வாழ்விற்கு அதனால் எந்த விளைவும் இருக்காது. பலன்கள் எல்லாம் முக்கியமல்ல நிரந்தரமானதல்ல. இது உண்மையல்ல ஏன் என்று Dr. லட்ச்ர் கூறுகிறார். கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** பலன்கள், அப்பறம், விசேஷித்த கனமும் சிலாக்கியங்களும். இதல்லாம் சாதாரணமாக விஷயங்கள் கிடையாது. பழைய பழமொழிகளை கேட்டிருக்கீங்களா, “ நாம, அவருக்கு முன்பாக நம்முடைய கிரீடங்களை கழற்று வைத்திடுவோம், “ சில நேரங்களில் இது கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக எப்படி இருந்தாலும் இது பெருசாக இருக்காது என்பது போல தோன்றும். இதுல நாம தெளிவா இருக்கணும். சிலர் கிரீடங்களை குறித்து பவுல் பேசியிருப்பது உண்மைதான். உதாரணமாக, மகிழ்ச்சியின் கிறேடத்தை குறித்து சொல்லியிருக்கிறார், மகிமையின் கிரீடம்”, நீதியின் கிரீடம். மேலும், ஜீவ கிரீடத்தை குறித்தும் சொல்லி இருக்கிறார், இது இரத்த சாட்சியாக மரிக்கிறவர்கள் மற்றும் சோதனையை மேற்கொள்ளுகிறவர்களுக்கு கொடுக்கப்படும் கிரீடங்கள்.

இதுல நிறைய கிரீடங்களை பெற முடியும். சோதனையை மேற்கொள்வதில் நான் உண்மையாக இருக்க முடியும். கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்க முடியும் அதினால், நீதியின் கிரீடத்தை நான் பெற முடியும். அதாவது, இவை அனைத்தும் வேதம் கூறுகிற சில அடையாளங்களாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் பாதத்திற்கு கீழ் வைக்கும்படி ஒரே ஒரு கிரீடத்தை தான் பெறுவோம் என்று சொல்ல முடியாது. நாம் பார்த்துகொண்டிருக்கும் பலன்கள் என்பது இந்த கிரீடங்களை குறிப்பது அல்ல. இவை அனைத்தும் இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து அவருடைய ராஜ்யத்தை ஆளும் சிலாக்கியமாக இருக்கிறது, இந்த சிலாக்கியங்கள் எவ்வளவு பெரியது என்பதை யோசித்து பாருங்கள்.

இப்ப, இதை யோசித்து பாருங்க, இந்த வாழ்க்கை என்பது சிறிய வெள்ளியை போன்றது. நித்தியத்தை கணக்கிடும்போது இது ஒரு மயிரிழை நாழிகை என்றே சொல்லணும். உங்களுக்கு நான் சொல்கிறேன், உங்க வாழ்க்கை பற்றி யோசித்து பாரும்போது என்ன தோணுது, அன்றைக்கு செய்திருக்கலாம் என்று நினைப்பதை இன்றைக்கு செய்யலாமே? இப்போதே செய்திடுங்க. இப்பவே செய்யுங்க. என்றென்றைக்குமாய் தேவனோடுள்ள உறவை காத்துக்கொள்ள இதுவே நல்ல சந்தர்ப்பம், பரலோகத்தின் உறவை காத்திடலாம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பிரியபடுத்தும் சந்தர்ப்பத்தை பெறுங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.